U.S. Consulate General Chennai

Press Release

220 Anna Salai, Gemini Circle, Chennai 600 006
Phone: +914428574181 | Email: ChennaiPressMbox@state.gov
https://in.usembassy.gov/embassy-consulates/chennai usconsulatechennai
chennai.usconsulate | USAndChennai | AmConGenChennai | USConsulateChennai

**ஜூடித் ரேவின் சென்னையில் அமெரிக்க துணைத் தூதராக பதவி ஏற்றார்**

செப்டம்பர் 6, 2020: செல்வி ஜூடித் ரேவின் அமெரிக்க துணைத் தூதராக இன்று சென்னையில் பதவி ஏற்றுக்கொண்டார்.

"உலகமே கோவிட்-19 என்ற தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு கடினமான காலத்தில், அமெரிக்க பிரதிநிதியாக, தென் இந்தியாவில், நான் பதவி ஏற்பது ஒரு முக்கிய மைல்கல்லாக கருதுகிறேன்," என்று துணைத் தூதர் ரேவின் கூறினார். "அமெரிக்காவும், இந்தியாவும் சேர்ந்து பயணிக்கும் இலக்குகளை, நான் கர்நாடகா, கேரளா, தமிழ் நாடு, மற்றும் மூன்று யூனியன் பிரதேசங்களாகிய அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகள், லக்ஷதீப் தீவுகள், மற்றும் புதுச்சேரியில், முன்னெடுத்து செல்வதை ஆர்வத்தோடு எதிர்நோக்குகிறேன்."

சென்னைக்கு வருவதற்கு முன்பு, துணைத் தூதர் ரேவின் பெரு நாட்டின் லிமாவில் அமெரிக்க தூதரகத்தில் பொதுவிவகார ஆலோசகராக பணியாற்றியுள்ளார். இதற்கு முன்பு வாஷிங்டன் டிசியில் உள்ள ஹெய்டி சிறப்பு ஒருங்கிணைப்பாளர் அலுவலகத்தில் சர்வதேச உறவு அதிகாரியாக பணியாற்றியுள்ளார். இஸ்லாமாபாத், பாகிஸ்தான்; சாண்டோ டொமிங்கோ, டொமினிக்கன் குடியரசு; கார்ட்டம், சூடான்; யவுண்டே, கேம்ரூன்; மற்றும் சியூடாட் ஜூரிஸ், மெக்சிக்கோ நாடுகளில் தூதரக பதவிகள் வகித்துள்ளார்.

துணைத் தூதர் ரேவின் தனது இளங்கலை படிப்பை அமெரிக்கா, பிரான்ஸ், மற்றும் ஸ்பெயின் நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் படித்துள்ளார். ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் ரொமான்ஸ் மொழிகள் மற்றும் இலக்கியங்களில் முதுகலை பட்டம் பெற்றுள்ளார். ஸ்பானிஷ் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் சரளமாக பேசுவார்.

2003ஆம் ஆண்டு அமெரிக்க வெளியுறவுத்துறையில் சேருவதற்கு முன்பு ரேவின், ஆசியா, ஆப்ரிக்கா, மற்றும் லத்தீன் அமெரிக்கா நாடுகளில் பதிப்பாசிரியர், மொழிபெயர்ப்பாசிரியர், மற்றும் பத்திரிகை நிருபராக அநேக ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். அவர் "பியொண்ட் அவர் டிக்ரீஸ் ஆப் செபரேஷன்: வாஷிங்டன் மான்சூன்ஸ் அண்ட் இஸ்லாமாபாத் ப்ளூஸ்" [Beyond Our Degrees of Separation: Washington Monsoons and Islamabad Blues (2017)] என்ற புத்தகத்தின் இணை ஆசிரியராகவும், "பேலே இன் த கேன் பீல்ட்ஸ்: விஜினெட்ஸ் ஃப்ரம் எ டொமினிக்கன் வான்டெர்லாக் [Ballet in the Cane Fields: Vignettes from a Dominican Wanderlogue (2014)] என்ற புத்தகத்தின் ஆசிரியருமாவார்.

***